ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2354/16 - 2023 ඔක්තෝබර් මස 18 වැනි බදාදා - 2023.10.18

2354/16 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி.21/ 1978 (X) (ஆ)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 1990 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிய 620/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அளவையிடுதல் தேசப்படம் வரைதல் நிறுவகம் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் "விஞ்ஞானமானி (அளவை விஞ்ஞானங்கள்) பட்டம் அளிக்கப்பெறுவதற்கு இட்டுச் செல்வதான அளவை விஞ்ஞானங்கள் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக பட்டமளிப்பு நிறுவகம் ஒன்றாக அங்கீகரிக்கின்றேன் :- " என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையை திருத்துகின்றேன் :

"இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறு அளவை விஞ்ஞானங்கள் பற்றிய விஞ்ஞானமானி கௌரவ பட்டம் அளிக்கப்பெறுவதற்கு இட்டுச் செல்வதான அளவை விஞ்ஞானங்கள் உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக பட்டமளிப்பு நிறுவகம் ஒன்றாக அங்கீகரிக்கின்றேன் :

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. அளவையிடுதல் தேசப்படம் வரைதல் நிறுவகமானது, ஆகக்குறைந்த 120 திறமை மட்டங்களுடன் (இலங்கை தகைமைக் கட்டமைப்பு (SLQF) மட்டம் 6) இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட அளவை விஞ்ஞானங்கள் பற்றிய விஞ்ஞானமானி கௌரவ பட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கை பரீட்சைகள்

1A - PG 6501 — 286 (2023/10)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில், இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் எனும் பாடங்கள் உள்ளடங்கலாக ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

2. ஆகக்குறைந்த நுழைவுத் தகைமையானது, இவ்வர்த்தமானியின் வெளியீட்டுத் திகதியிலிருந்து பயனுக்கு வருதல் வேண்டும்.

3. அளவையிடுதல் தேசப்படம் வரைதல் நிறுவகம் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| அளவை விஞ்ஞானங்கள் பற்றிய விஞ்ஞானமானி கௌரவ பட்டம் | பிஎஸ்சி கௌரவ (அளவை விஞ்ஞானங்கள்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஒற்றோபர் 12.*

EOG *10-0183*